DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal procedure)
(In the Court of the Assistant Sessions, Sankarankovil)
S.C.No. 133/2018
*****

Deposition of Witness for Prosecution witness No: PW 11

LW 13

| | |
|---|---|
| Name | : முருகேசன் |
| Father`s Name | : இராமசாமி |
| Village | : |
| Taluk | : எட்டயபுரம் |
| Calling | : உதவி ஆய்வாளர், பசுவந்தனை காவல் நிலையம் |
| Religion | : |
| Age | : 58 |
| Date | : 15.07.2026 |

**( A2, A3, A5 present. A1, A4, A6 absent. 317 crpc petition filed and allowed. )**

Solemnly affirmed by Thiru.P.Mahindra Varma, Subordinate Judge, Sankarankovil in accordance with section 6(2) of Act No.44 of 1969.

**முதல் விசாரணை**

**(சாட்சியம் Video Conference மூலமாக எடுக்கப்படுகிறது. )**

I do solemnly affirm that what I shall state that shall be truth, the whole truth and nothing but the truth.

நான் தூத்துக்குடி மாவட்டத்தில் பசுவந்தனை என்ற ஊரில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் சிவகிரி காவல் நிலையத்தில் 2016 ஆம் வருடம் பணியில் இருந்த பொழுது 27.08.2016 ஆம் தேதி காலை 9.00 மணியளவில் நான் நிலைய பொறுப்பில் இருந்த பொழுது பி.ரெட்டியபட்டி ராஜபாளையம் மெயின் ரோடு போத்தி நாயக்கர் மகன் நடராஜன் வயது 66 நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று அதன் தன்மைக்கேற்ப சிவகிரி காவல் நிலைய குற்ற எண்.153/2016 பிரிவு 448, 427, 397, 506(2) இ.த.ச வழக்கு பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கையின் அசலையும், வாதியின் புகார் மனுவை வைத்து கனம் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், சிவகிரி

அவர்களுக்கு அனுப்பி வைத்து மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தும் விசாரணைக்காக ஒரு நகலை சிவகிரி காவல் நிலைய ஆய்வாளர் அவர்களுக்கும் பார்வைக்கு வைத்தும் தகவல் தெரிவித்தேன். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார். முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

புகார்தாரர் எந்த தேதியில் எத்தனை மணிக்கு புகார் கொடுத்தார் என்றால் 27.08.2016 ஆம் தேதியில் காலை 9.00 மணிக்கு புகார் கொடுத்தார். சம்பவ நடந்த இடத்திற்கும், எங்கள் காவல் நிலையத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 16 கி.மீ இருக்கும். புகார் மனு யார் எழுதி கொண்டு வந்தார் என்ற விபரம் எனக்கு தெரியாது. புகார் மனுவில் 2 வது பக்கத்தில் ஒருவர் பின் ஒருவராக ஏழு பேர்கள் ஏறி குதித்தார்கள் என்று எழுதப்பட்டுள்ளதில் ஏழு என்பது Overwriting செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அதே பக்கத்தில் 45,000/–என எழுதப்பட்டு பின்னர் 40,000/– என திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 3 வது பக்கத்தில் வெளியே நாங்கள் வந்தால் எங்களை கொன்று விடுவதாக மிரட்டி இருந்தார்கள் என்ற வாசகம் இடைச்செருகலாக அடிக்கப்பட்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. புகார் மனுவில் 3 வது பக்கத்தில் 8 வது வரியில் சுமார் 11 1/2 என்ற எண் இடைச்செருகலாக எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். வீட்டின் வெளியே பூட்டிவிட்டு சென்றுவிட்டார் என்று புகார் மனுவில் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகார் மனுவில் ஒரு பெரிய கத்தியை போட்டுவிட்டார்கள் என்று இடைச்செருகலாக எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகார் மனுவில் 3 வது பக்கத்தில் 9 வது வரிக்கு கீழே மிரட்டி என்ற வாசகம் இடைச்செருகலாக எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த 3 வது பக்கத்தில் புகார் மனுவில் கீழே எங்கள் வீட்டில் இருந்து திருடு போன சொத்தின் மதிப்பு ரூ.2,20,000/– என

குறிப்பிட்டுள்ளார் என்றால் திருடு போனதாக சொல்லியுள்ளார்கள். புகார் மனுவில் உள்ள திருத்தங்கள் அனைத்தும் யாரால் திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை 9 வது காலத்தில் Property Table–ல் காட்டியுள்ளவாறு புகாரில் காட்டப்படவில்லை என்றால் காட்டியுள்ளார். முதல் தகவல் அறிக்கையில் பணிந்து சமர்ப்பிக்கிறேன் என்ற வார்த்தைக்கு பின் இன்று 27.08.2016 ம் தேதி 15.00 மணிக்கு சிவகிரி காவல் நிலைய பொறுப்பில் இருக்கும் பொழுது என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். 15.00 மணி என்பது மாலை 3.00 மணி ஆகும் என்றால் சரிதான். புகார் மனுவில் Receive the Petition 27.08.2016 ம் தேதி, காலை 9.00 மணிக்கு புகார் பெறப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் சொத்து மதிப்பு தனித்தனியாக கூறப்பட்டுள்ளது. அது எந்த ஆவணத்தின் அடிப்படையில் கூறப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டு சொல்லிக்கொள்ளவில்லை என்றால் சரிதான். நகை மதிப்பை மதிப்பீடு செய்வதற்கு மதிப்பீட்டாளர் வைத்து எந்த ஆவணமும் பெற்று கொள்ளவில்லை என்றால் எனக்கு ஞாபகமில்லை. முதல் தகவல் அறிக்கையில் 15 வது காலத்தில் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 27.08.2016 ம் தேதியில் 16.00 மணி என்று சொன்னால் சரிதான். ஆனால் முதல் தகவல் அறிக்கை நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாள் 08.09.2016 ஆம் தேதி, காலை 10.30 மணி என்றாலும், நீதிமன்றத்திற்கு 10 நாட்கள் காலதாமதமாக முதல் தகவல் அறிக்கை அனுப்பப்பட்டதற்கு உரிய காரணம் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கையில் பெயர், முகவரி தெரியாத 7 நபர்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கிற்கும், எதிரிகளுக்கும் எந்த வித சம்பந்தமும் இல்லை என்றாலும், வேறு வேறு வழக்குகளில் உள்ள எதிரிகளை இரண்டு இரண்டு நபர்களாக எடுத்து புள்ளி விபர கணக்கில் காட்ட இந்த வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளார்கள் என்றால் சரியல்ல. நான் முதல் தகவல்

அறிக்கை தயார் செய்து உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியதாக கூறுவது உண்மையல்ல என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கை முன்கூட்டியே தயார் செய்து அதன் பின்னீட்டு உங்களால் புகார் மனு உற்பத்தி செய்யப்பட்டு இந்த வழக்கிற்காக பொய்யாக எழுதப்பட்டுள்ள சங்கதிகள் ஆகும் என்றால் சரியல்ல. உண்மையில் அந்த வீட்டில் ஏற்கனவே முன்கூட்டியே திருடு போன நகைகளை மீட்க சொல்லி கொடுத்த புகார் மனுவினை வாபஸ் பெற்று கொண்டு இந்த வழக்கிற்காக புதியதாக புகார் மனு பெறப்பட்டு இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எந்த வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.